# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி சமூகஅறிவியல் மதிப்பெண்கள் : 100

பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடு:- 14×1=14

1) மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது?
அ) ஆகாய போர் முறை ஆ) பதுங்குக் குழிப் போர் முறை
இ) நீர்மூழ்கிக் கப்பல் போர் முறை ஈ) கடற்படைப் போர் முறை

2) பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன் முயற்சி எடுத்தவர் யார்?
அ) ரூஸ்வெல்ட் ஆ) சேம்பர்லின் இ) உட்ரோவில்சன் ஈ) பால்டுவின்

3) வேலூர் புரட்சி எப்போது வெடித்தது
அ)1805 மே 24 ஆ) 1805 ஜுலை 10
இ) 1806 ஜுலை 10 ஈ) 1806 செப்டம்பர் 10

4) இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடைபெற்றது?
அ) ஈரோடு ஆ) சென்னை இ) சேலம் ஈ) மதுரை

5) பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்

6) பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன.
அ) அயனமண்டல பசுமை மாறாக்காடுகள் ஆ) இலையுதிர்க்காடுகள்
இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக்காடுகள்

7) ஆந்த்ரசைட் நிலக்கரி ______ கார்பன் அளவை கொண்டுள்ளது.
அ) 80%-90% ஆ) 70%க்கு மேல் இ) 60%-70% ஈ) 50%க்கும் குறைவு

8) கூற்று: தமிழ்நாடு தென்மேற்கு பருவகாற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை
காரணம்: இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது.
அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
ஈ) காரணம் சரி, ஆனால் கூற்று தவறு

9) மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி
அ) சமத்துவ உரிமை ஆ) சுரண்டலுக்கு எதிரான உரிமை
இ) சொத்துரிமை ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

10) கீழ்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்?
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 360 இ) சட்டப்பிரிவு 356 ஈ) சட்டப்பிரிவு 365

11) இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது?
அ) வங்காளதேசம் ஆ) மியான்மர் இ) ஆப்கானிஸ்தான் ஈ) சீனா

12) முதன்மை துறை இதனை உள்ளடக்கியது
அ) வேளாண்மை ஆ) தானியங்கிகள் இ) வர்த்தகம் ஈ) வங்கி

13) உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம்
அ) கேரளா ஆ) ஆந்திரபிரதேசம் இ) தமிழ்நாடு ஈ) கர்நாடகா

14) இந்தியாவில் உள்ள வரிகள்
அ) நேர்முக வரிகள் ஆ) மறைமுகவரிகள் இ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) ஈ) ஏதுமில்லை

பகுதி - II

குறிப்பு:- ஏவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண். 28க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 10×2=20

15) மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.
16) "டாலர் ஏகாதிபத்தியம்" - தெளிவுபட விளக்குக.
17) இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறுகுறிப்பு வரைக.
18) பாளையக்காரர்களின் கடமைகள் யாவை?
19) சைமன் குழு புறக்கணிக்கப்பட்டது ஏன்?
20) இந்தியாவின் அன்டைநாடுகளின் பெயர்களை கூறுக.

Scanned with CamScanner

21) இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.
22) இந்தியாவில் காணப்படும் மண்வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
23) நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.
24) தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.
25) செம்மொழித் தகுதிபெற்ற இந்திய மொழிகள் எவை?
26) சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
27) தனிநபர் வருமானம் என்றால் என்ன?
28) நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?

## பகுதி - III

குறிப்பு:- எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். 10×5=50
வினா எண். 42க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

29) கோடிட்ட இடங்களை நிரப்புக
i) நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை ________ என அழைக்கப்பட்டது.
ii) குலாம் கிரி நூலை எழுதியவர் ________
iii) ________ தமிழ்நாட்டின் மாநில விலங்கு ஆகும்.
iv) ________ மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்.
v) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி ________ ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தது.
30) ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
31) இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க
32) வேலூரில் 1806-ல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.
33) சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கினை விவரி?
34) அ) வேறுபடுத்துக.
i) மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்
ii) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்
ஆ) காரணம் கூறுக: மலைப்பகுதிகள் சமவெளியை விட குளிரானவை
35) இந்தியத் தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.
36) தமிழ்நாட்டின் பல்வேறு போக்குவரத்து முறைகளை விவரி?
37) இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
38) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி?
39) GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை?
40) பசுமைப்புரட்சி ஏன் தோன்றியது என்பதைப் பற்றி விவரி?
41) கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1910 முதல் 1930 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய இந்திய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42) உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.
i) கிரேட் பிரிட்டன் ii) இத்தாலி iii) மொராக்கோ iv) ஜப்பான் v) சான்பிரான்ஸ்கோ

## பகுதி - IV

குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். 2×8=16

43) அ) கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப்போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக. (அல்லது)
ஆ) காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.
44) அ) கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களை குறிக்கவும்.
i) ஆரவல்லி ii) நர்மதை iii) தக்காண பீடபூமி iv) பன்னா உயிர்கோள பெட்டகம்
v) தார்பாலைவனம் vi) மேற்கு தொடர்ச்சி மலை
vii) பாரதீப் துறைமுகம் viii) கரிசல் மண் பகுதி ஒன்று (அல்லது)
ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களை குறிக்கவும்.
i) பாலாறு ii) வேடந்தாங்கல் iii) பழவேற்காடு ஏரி iv) முல்லை பெரியார் அணை
v) பட்டுதொழில் நடைபெறும் இடம் vi) எண்ணூர்
vi) விமானம் நிலையம் (ஏதேனும் ஒன்று) viii) இந்தியப் பெருங்கடல்

****/****

Scanned with CamScanner